# <u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.</u>

முன்னிலை : **திரு. G. யுவராஜ், M.A., M.L.,**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**

2022–ஆம் ஆண்டு, ஜுன் திங்கள், 06–ஆம் நாள், திங்கட்கிழமை

<u>அசல் வழக்கு எண் 239/2019</u>

**<u>(CNR No. TNSA-1300-0385-2019)</u>**

A. மதலையம்மாள், வயது 60,
த/பெ. ஆரோக்கியம் (எ) ஆரோக்கியசாமி,
வசிப்பது, பழைய கதவு எண். 104,
புதிய கதவு எண். 106, வடக்கு காட்டுக்கொட்டாய்,
கோனேரிப்பட்டி, தம்மம்பட்டி, சேலம் – 636113. .. வாதி

எதிராக

1. திருமதி. பத்தலிஸ் மேரி, வயது 66,
   க/பெ. லேட். சோப்பன் (எ) கிறிஸ்ட் மரியா ஜோசப்,
2. ராஜா, வயது 46,
   த/பெ. லேட். சோப்பன் (எ) கிறிஸ்ட் மரியா ஜோசப்,
3. வெனிஷ், வயது 42,
   த/பெ. லேட். சோப்பன் (எ) கிறிஸ்ட் மரியா ஜோசப்,
4. ரமேஷ், வயது 35,
   த/பெ. லேட். சோப்பன் (எ) கிறிஸ்ட் மரியா ஜோசப்,
5. மேரி, வயது 50,
   த/பெ. லேட். சோப்பன் (எ) கிறிஸ்ட் மரியா ஜோசப்,

6. மடோனா, த/பெ. லேட். சோப்பன் (எ) கிறிஸ்ட் மரியா ஜோசப்,
1 முதல் 6 வரை பிரதிவாதிகள் வசிப்பது,
அஞ்சல் அலுவலகம் அருகில், கோனேரிப்பட்டி,
தம்மம்பட்டி, சேலம் – 636113. .. பிரதிவாதிகள்

| | | | |
|---|---|---|---|
| வழக்கு நாள் | : 27.11.2019 | மொத்த வழக்கு மதிப்பு | : ரூ.1,000/– |
| வழக்கு மூலம் | : 29.10.2019 | பிரிவு 27(c)–ன் கீழ் செலுத்தப்பட்ட | |
| அன்று கோனேரிப்பட்டி கிராமத்தில் ஏற்பட்டது. | | நீதிமன்ற கட்டணம் | : ரூ.30.00 |

தாவா சொத்தினை வாதி அமைதியான முறையில் அனுபவித்து வருவதற்கு பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ எவ்வித இடைஞ்சல், தடங்கலும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரியும் மற்றும் வழக்கு செலவுத் தொகை கோரியும் வாதி வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

கடந்த 27.11.2019 அன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, அதே தினம் இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டுள்ள இவ்வழக்கின் மீதான விசாரணையானது கடந்த 26.04.2022 அன்று என் முன்னர் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. S. மோகன் அவர்கள் ஆஜராகியும், 1, 4 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. H. முனவர்கான் அவர்கள் ஆஜராகி பின்னிட்டு பதிலுரை எதுவும் தாக்கல் செய்யாததால் தோன்றா தரப்பினர்களாக்கப்பட்டும், 2, 3, 5, 6 பிரதிவாதிகள் அழைப்பாணை பெற்றுக்கொண்டும் ஆஜராகாமல் தோன்றா தரப்பினர்களாக்கப்பட்டும், வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களையும், தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்களையும் பரிசீலனை செய்தும், வாதி தரப்பை கேட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் கவனமான பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

.. 3 …

**தீர்ப்பாணை**

| | |
|---|---|
| 1. | இறுதியாக, நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி வாதி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு அனுமதிக்கப்படுகின்றது. |
| 2. | முடிவில், வாதி தாவா சொத்தினை அமைதியான முறையில் அனுபவித்து வருவதற்கு பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ, யாரும் எந்தவித இடைஞ்சல், தடங்கலும் செய்யக் கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகின்றது. |
| 3. | வழக்கின் தன்மையை கருதி செலவுத் தொகை இல்லை. |

**செலவுப்பட்டியல்**

| | வாதி<br>ரூ. | பிரதிவாதிகள்<br>ரூ. |
|---|---|---|
| பிராது ஸ்டாம்பு | செலவுப்பட்டியல் தாக்கல் இல்லை | செலவுப்பட்டியல் தாக்கல் இல்லை |
| வக்காலத்து நாமா ஸ்டாம்பு | | |
| தஸ்தாவேசுகளுக்கு ஸ்டாம்பு | | |
| வக்கீல் பீஸ் | | |
| புரோசஸ் கட்டணம் | | |
| விண்ணப்பம் செலவு | | |
| டைப் செலவு | | |
| எழுத்துக்கூலி | | |

## DESCRIPTION OF PROPERTY

சேலம் கிழக்கு பதிவு மாவட்டம், தம்மம்பட்டி சார் பதிவகம், கெங்கவல்லி வட்டம், கோனேரிப்பட்டி கிராமத்தில் இதுவரை எனக்கு மேலே கண்டபடி

பாத்தியம், அனுபவம் இன்று இந்த சுத்த கிரயப்பத்திரத்தின் மூலம் மேலே கண்ட தாங்களுக்கு எழுதிக்கொடுத்து சுவாதீனம் விட்டுள்ள சொத்தின் விபரம். சர்வே நெம்பர் 80/4 புஞ்.ஹெக்.0.0.09.5–க்கு பு.ஏ.0.23 செண்ட் (எண்பதின் கீழ் நான்கு ஒன்பதரை ஏர்ஸ்க்கு இருபத்து மூன்று செண்ட்) இதில் பொதுவில் பேர்பாதி பாத்தியம் பூராவும் பு.ஏ.0.11–1/2 செண்ட் நிலம் பூராவும்.

**மேற்படி நிலத்துக்கு செக்குபந்தி விவரம் :–**

| | | |
|---|---|---|
| கிரயம் பெறும் தாங்கள் சகோதரி இருதயமேரி நிலத்துக்கும் | – | வடக்கு |
| மேற்படி சர்வே நெம்பரில் கிரயம் பெறும் தாங்களின் தகப்பனார் ஆரோக்கியசாமி இதர நிலத்துக்கும் | – | மேற்கு |
| பாக்கியநாதன் நிலத்துக்கும் | – | தெற்கு |
| ஆரோக்கியசாமி நிலத்துக்கும் | – | கிழக்கு |

இதன் மத்தியில் உள்ள பு.ஏ.0.11–1/2 செண்ட் நிலம் பூராவும் இக்கிரயத்திற்கு சம்மந்தப்பட்டது.

06.06.2022–ம் நாளன்று எனது கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

(ஒம். **G**. யுவராஜ்)

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

ஆத்தூர்.

**மு.மா.உ.நீ., ஆத்தூர்.**

**தீர்ப்பாணை**

**அ.வ. எண் 239/2019**

நாள் : 06.06.2022.

**PARTICULARS OF IMMOVABLE PROPERTY**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR.**

**O.S. No. 239/2019**

A. Madalaiyammal .. Plaintiff

Vs.

Tmt. Pathalese Mary and Others .. Defendants

**Valuation of immovable property for Purpose of court fees.**

| ***Section and sub section of the Act*** | ***Nature of suit*** | ***Annual revenue of rent payable*** | ***Market value Rs. P.*** | ***Value for purpose of court fees Rs. P.*** |
|---|---|---|---|---|
| U/s. 27(c) of TNCF Act | Permanent Injunction | 1,000.00 | 1,000.00 | 30.00 |

A. Madalaiammal
Plaintiff

Sd/- XXXXX
Counsel for the Plaintiff

By order / True copy /
(Sd/-.)
SUPERINTENDENT